1986 ஏப்ரல் 28]

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிடும்பொழுது மானியத்தில் சிறு விவசாயிகளுக்கு உரம், பூச்சிக் கொல்லி மருந்து கொடுப்பதாகக் கூறினார்கள். அதைப் போல், ஆதி திராவிட மக்களுக்கு சிறு விவசாயிகளாக இருந்தால் விதை, பூச்சி மருந்து ஆகியவைகள் இலவசமாகக் கொடுக்கப்படும் செயற்குறிப்பு உள்ளதாகத் தெரிகிறது. அது உண்மையா ? அதே சமயத்தில் கிராமப் புறங்களிலே மானிய விலையிலே பூச்சிக் கொல்லி மருந்து கொடுக்கின்றபொழுது எல்லா விவசாயிகளுக்கும், குறிப்பாக சிறு விவசாயிகளுக்குத் தெரியாமல் போய் விடுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஏழு இலட்சம் ரூபாய், கடந்த வெள்ள நிவாரணத்தின் பொழுது பூச்சி மருந்தை மானிய விலையில் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய் தான் கொடுக்கப்பட்டு இரண்டு இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டது. ஆகவே, கிராமப் புறங்களிலே இது போல மானிய விலையில் கொடுக்கப்படும் என்று ரெவின்யூ இலாக்கா மூலமாக பிரச்சாரம் செய்து மானிய விலையிலே வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கென்று விவசாயத் துறை மூலமாக தனித் திட்டங்கள் தனி மானியத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சில மானியத் தொகை விவசாயப் பெருமக்களுக்குக் கொடுப்பது தெரியாமல் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். பயிற்சி வழி தொடர்பு போன்ற திட்டங்களை கூட எந்தெந்த வகையில் பயன் படுத்த வேண்டுமோ அந்தந்த வகையில் பயன் படுத்துகிறோம். அதிலே இன்னும் விளம்பரம் தேவைப்படும் என்ற வகையில் அவர்கள் கருதுவார்களானால் அதிலே மேற்கொண்டு என்ன முயற்சியை செய்யவேண்டுமோ அந்த முயற்சிப் செய்யப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டம்.

593—(*வினா எண். 7451): திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் திட்டங்கள் ஏதும் செயல் படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

போக்குவரத்துக்கல்லாத மோட்டார் வாகன வரி வசூல்.

594—(*வினா எண். 4727) திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூல் செய்யும் பணியை சென்னையில் உள்ள போக்குவரத்து அலுவலகம் பெறுவது போல் தமிழகத்தில் மற்ற எல்லா இடங்களிலும் போக்குவரத்து இல்லாத வாகனங்களுக்கு வரி வசூல் செய்யும் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. பூசுப் : சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் போக்குவரத்துக்கல்லாத மோட்டார் வாகன வரி அரசுக் கருவூலங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைகள் மூலம் தற்போது வசூலிக்கப்படுகிறது. இருப்பினும் போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் வசூலிப்பது குறித்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ் மூதாட்டி ஔவை பெயரில் போக்குவரத்துக் கழகம்.

595—(*வினா எண். 8243) : திரு. மு. இராமநாதன், திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மூதாட்டி ஔவையின் பெயரை போக்குவரத்துக் கழகம் ஒன்றிற்குச் சூட்டும் செயற்குறிப்பு அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?